**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன்**

**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி**: 09.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 30/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-5 |
| **சாட்சியின் பெயர்** | : | ஸ்டாலின் |
| **தந்தை பெயர்** | : | நாகப்பன் |
| **கிராமம்** | : | காவனூர் |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 45 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா-1 நாகப்பன் எனது அப்பா ஆவார். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். எதிரி தேவர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரி எனது மனைவி மாலா என்பவரிடம் தவறான உறவில் இருந்து வந்துள்ளார். இது தெரிந்து எனக்கும் எனது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு என் மனைவி அவரது வீட்டிற்கு போய்விட்டார். நான் திருப்பூரில் சாய பட்டரையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.02.2021 ஆம் தேதி நான் திருப்பூரில் சாயப் பட்டரையில் வேலையில் இருந்தேன். அப்போது என் தகப்பனார் போன் மூலம் என்னை தொடர்பு கொண்டு எதிரி வந்து அவரிடம் தகராறு செய்து சாதியை சொல்லி பேசி அடித்ததாகவும், அதில் காயம் ஏற்பட்டதாகவும் சொன்னார். நான்

இதனை கேள்விப்பட்டு மறுநாள் ஊருக்கு வந்து என் தகப்பனாரை பார்த்தேன் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனது மனைவிக்கும் எதிரிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் ஊரில் உள்ளவர்கள் பேசியதை கேட்டு நான் இவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவியும் நானும் ஒன்றாகதான் வாழ்ந்து வருகிறோம் என்று சொன்னால் நான்கு ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்தோம் தற்போது ஒன்றாக தான் வாழ்ந்து வருகிறோம். இந்த வழக்கு சம்மந்தமாக நான் ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னிடம் விசாரித்து எழுதி வாங்கிக் கொண்டார்களா என்றால் விசாரணை செய்தார்கள் என்னிடம் எதுவும் எழுதி வாங்கவில்லை. என் தகப்பனாருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. என் தகப்பனார் மது அருந்திவிட்டு இருட்டில் கண்ணு தெரியாமல் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றும் அந்த காயத்தை பயன்படுத்தி எனது தகப்பனார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு வேண்டாதவர்கள் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் அ.சா-1 -ல் பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.09 17:21:58 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.